வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 3621/அ4/2022 நாள் 28.11.2022

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – 01.08.2022 அன்றைய நிலவரப்படி – அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதுகலை ஆசிரியர்களை பணிநிரவல் மூலம் மாறுதல் ஆணை வழங்குதல் – கீழ்க்காணும் முதுகலை ஆசிரியர்களை பணியிலிருந்து விடுவிக்கக் கோருதல் – தொடர்பாக. |
| பார்வை | சென்னை -6 தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் 054550/சி3/இ1/2022 நாள் 24.11.2022 |

பார்வையில் காணும் செயல்முறை கடித ஆணைக்கிணங்க , 2022 -2023 ஆம் கல்வி ஆண்டிற்குரிய 01.08.2022 நிலவரப்படி முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு அதனடிப்படையில் ஆசிரியருடன் உபரி எனக் கண்டறியப்பட்ட முதுகலை ஆசிரியர்களை EMIS இணையதளம் மூலமாக ( Online Deployment Counselling ) இணைப்பில் காணும் பள்ளியின் முதுகலை ஆசிரியர்களுக்கு வேலூர், காட்பாடி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகத்தில் (SSA) 29.11.2022 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே தங்கள் பள்ளியில் பணிபுரியும் முதுகலை ஆசியர்களை பணியிலிருந்து விடுவித்த அறிக்கையுடன் அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

( **குறிப்பு** ) – சார்ந்த முதுகலை ஆசிரியர்கள் பணிநிரவல் கலந்தாய்வில் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும், அவ்வாறு கலந்தாய்வில் கலந்து கொள்ளாமல் இருப்பது கண்டறிப்பட்டால் அவ்வாசிரியரை கடைசியில் காலிப்பணியிடமாக உள்ள பள்ளிக்கு ஆணை வழங்கப்படும், மேலும் துறை சார்ந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு**

பள்ளிகளின் பெயர் மற்றும் ஆசிரியர்களின் பெயர்

//ஒப்பம் //

// க.முனுசாமி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

**பெறுநர்**

இணைப்பில் காணும் தலைமைஆசிரியர்கள்

அரசு மேல்நிலைப் பள்ளி, வேலூர் மாவட்டம்.